DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 239/2015 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முருகவேல் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.07.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறேன். அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வணிகவியல் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 24.09.2011 ம் தேதி இரவு 6.00 மணிக்கு மேல் வசந்தா என்பவர் என் வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர். அவரது தாலிக் கொடியை அறுதது விட்டு சென்றதாக தகவல் கூறினார். எங்கள் வீதியின் முனையில் அதாவது குமரன் நகர் தளி ரோடு மெயின் ரோட்டிலிருந்து குமரன் நகர் முகப்பில் சம்பவம் நடந்திருந்தது. எங்களிடம் தகவல் சொன்னதால் நானும் ரவி சந்திரன் என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்று பேசி கொண்டிருந்தோம். அப்போது போலிசார் அங்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். படித்து பார்த்து கையெழுத்துபோட சொன்னார்கள் . அந்த வீதியில் இருந்த ஜெயபால் வீடு, பக்கத்தில் காலி இடங்களை குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். விவரங்களை தெரிந்து நானும் ரவிச்சந்திரனும் கையொப்பம் செய்தோம் வரைபடம் வரைந்த நேரம் 7.45 மணிக்கு மேல் இருக்கும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.**2** என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். வசந்தா தற்போது

இறந்துவிட்டார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள வழக்கமாக பள்ளிக்கு எத்தனை மணிக்கு செல்விர்கள் என்றால் காலை 8.45–8.50 க்குள். மீண்டும் பணி முடிந்து எத்தனை மணிக்கு வருவிர்கள் என்றால் பள்ளி 4.30 மணிக்கு முடியும் தனி வகுப்பு இருந்தால் 5.15 மணி ஆகும். பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் உள்ள விவரம் தெரியாது என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தோன். முதல் மற்றும கடைசி வரி சொல்ல முடியுமா என்றால் 11 வருடம் ஆனதால் ஞாபகம் இல்லை.
2. நீங்களும் உங்கள் நண்பரும் எத்தனைமணிக்கு நின்று பேசி கொண்டிருந்திர்கள் என்றால் மாலை 6.30 மணி இருக்கும், உடன் நிறைய பேர் இருந்தார்கள். போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 7.00 மணி இருக்கும். போலிசார் நடந்து வந்தார்களா அல்லது வாகனத்தில் வந்தார்களா என்றால் அவரது வாகனத்தில் வந்தார்கள். என்ன வாகனம் மற்றும கலர் தெரியுமா என்றால் தெரியாது எத்தனை போலிசார் வந்தார்கள் என்றால் 4 பேர். SI கையெழுத்து வாங்கினாரா என்றால் கேடர் தெரியாது யூனிபார்ம் அணிந்திருந்தார்.
3. போலிசார் வாக்குமூலத்தில் நீங்கள் எத்தனை மணிக்கு நீங்கள் அங்கு இருந்ததாக சொல்லவில்லை என்றால் அதில் எழுதவில்லை. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெழுததுபோட்டிர்கள் என்றால் சம்பவ இடத்தில் வரைந்தார்கள் அங்கே வைத்து கையெழுத்து போட்டோம். போலிசார் எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் எ ங்களை 5 நிமிடம் விசாரித்தார்கள், பின்னர் சுற்றி உள்ளவர்கள் அனைவரையும் விசாரித்தார்கள்.
4. போலிசார் எத்தனை மணிக்கு திரும்பி சென்றார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் நீங்கள அதில் கையொப்பம் போடவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.